| Published Date: | Tuesday 9th July, 2019 | Publication: | Dinamani (Tamil) [Chennai] |
|---|---|---|---|
| Journalist: | Bureau | Page No: | 15 |
| MAV/CCM: | 55,539/32.67 | Circulation: | 48,000 |

# ஸ்டெர்லிங்–வில்ஸன் சோலார் நிறுவனத்தின் ரூ.4,500 கோடி புதிய பங்கு வெளியீட்டுக்கு செபி அனுமதி

**புது தில்லி, ஜூலை 8:** ஸ்டெர்லிங்–வில்ஸன் சோலார் நிறுவனத்தின் ரூ.4,500 கோடி புதிய பங்கு வெளியிடும் திட்டத்துக்கு பங்குச் சந்தை ஒழுங்காற்று அமைப்பான செபி அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து செபி வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்டெர்லிங்–வில்ஸன் சோலார் நிறுவனத்தின் தலைவர்களான யாசுதி தருவாலா மற்றும் சபூர்ஜி பலோன்ஜி வசமுள்ள பங்குகளை புதிய பங்கு வெளியீட்டின் மூலம் விற்பனை செய்ய அந்நிறுவனம், கடந்த ஏப்ரல் 15–ஆம் தேதி விண்ணப்பித்தது. இந்த புதிய பங்கு வெளியீட்டின் மொத்த மதிப்பு ரூ.4,500 கோடி.



அந்நிறுவனத்தின் ஜூலை 4–ஆம் தேதி பரிந்துரைகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் இப்புதிய பங்கு வெளியீட்டுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என செபியின் வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018–ஆம் ஆண்டு டிசம்பர் 31–ஆம் தேதி நிலவரப்படி ஸ்டெர்லிங்–வில்ஸன் சோலார் நிறுவனத்தின் மொத்த ஆர்டர்களின் மதிப்பு ரூ.4,309.09 கோடியாக இருந்தது.